

# திருக்குறளும் இசையும்

கலாநிதி மீரா வில்லவராயர்
பிரதம செயற்றிட்ட அதிகாரி
தேசிய கல்வி நிறுவகம்

நீதி நூல்களுள் தலையாய நூலாகக் கருதப்படும் திருக்குறள் அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நான்கு பொருள்களுள் முதல் மூன்றையும் பற்றி 1330 குறட்பாக் களால் விளக்குகின்றது. திருவள்ளுவர் அறத்தை 380 குறள்களில் 38 அதி காரங்களிலும் அரசியல், அமைச்சர் முதலானவர்கள் பற்றியும் குடிமக்களின் பண்புகள் பற்றியும் இரண்டாம் பகுதியில் 700 குறள்களில் 70 அதி காரங்களிலும் மூன்றாம் பகுதியில் உயர்ந்த காதலரின் காதல் பற்றி 250 குறள்களில் 25 அதிகாரங்களிலும் விளக்கியுள்ளார்.

வெவ்வேறு சமயத்தைச் சார்ந்த வரும் போற்றும் வகையில் நெஞ் சத்தைப் பண்படுத்தும் அன்பு நெறி களையும் நீதிகளையும் கூறும் திருக் குறள் பல இசைக்கருவிகள் பற்றியும் அவற்றின் இயல்புகள் பற்றியும் விளக்கிக் கூறுகின்றது. இசைக்கருவி களுள் குழலின் சிறப்புக் கருதி திருக்குறளை உலகிற்கு அளித்த பொய்யா மொழிப் புலவரும் "மக்கட்பேறு" என்னும் அதிகாரத்தில் பின்வருமாறு கூறுகிறார்.

குழலினிது யாழினி தென்பதம் -
மக்கள்
மழலைச்சொற் கேளா தவர். (கு.66)

சிலப்பதிகாரம் இயற்றிய இளங் கோவடிகள், 'குழலின் வழி நின்றது யாழே' என யாழுக்கு இரண்டாம் இடத் தையே கொடுத்துள்ளார். அவ்வாறே வான்மறை வகுத்த வள்ளுவரும் குழலையே முதன்மையானதாகக் கூறி யாழினை இரண்டாவதாகக் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் வள்ளுவர் 'பொழுது கண்டு இரங்கல்' என்னும் அதிகாரத்தில் ஆயனின் குழலோசை துன்பத்தைத் தருவிக்கும் பொருட்டாக அமைந் துள்ளது என்கிறார்.

அழல்போலும் மாலைக்குத் தூதாகி
யாயன்
குழல்போலுங் கொல்லும் படை.
(கு.1228)

இக்குறளடிகளின் பொருள்: ஆயனு டைய புல்லாங்குழல், நெருப்புப் போல் வருத்தும் மாலைப் பொழுதிற்குத் தூதாகி என்னைக் கொல்லும் படை யாகவும் வருகின்றது என்பதாகும்.

பண்டைய இசைக்கருவிகளுள் ஒன்றான யாழினைப் பற்றியும் பின்வருமாறு வள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார்.

கணைகொடிது யாழ்கோடு
செவ்விதாங் கன்னார்
வினைபடு பாலாற் கொளல் (கு.279)





Scanned by CamScanner

இக்குறளின் வாயிலாக வில்லைப் போன்று யாழ் வளைவாக இருந்தமையை அறிய முடிகின்றது.

தமிழ் மக்களிடையே வழக்கிலிருந்த இன்னுமொரு இசைக்கருவி பறையாகும். மனிதன் தோன்றிய காலத்திலிருந்து இன்றுவரை பயன்படுத்தப்படும் ஓர் கருவியாகப் பறை விளங்குகின்றது. திருவள்ளுவரும் பறை பற்றி பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

அறைபறை யன்னர் கயவர்தாங் கேட்ட
மறைபிறர்க் குய்த்துரைக்க லான்
(கு.1076)

'கயவர், தாம் கேட்டறிந்த மறை பொருளைப் பிறர்க்கு வலியக் கொண்டு போய்ச் சொல்லுவதால் அறையப்படும் பறை போன்றவர்' என்பது இக்குறளின் பொருளாகும்.

இசைக் கருவிகளைப் பற்றிக் குறிப்பிடும் வள்ளுவர் பண்ணைப் பற்றிக் கூறவும் தவறவில்லை. பண் என்பது மூலாதாரம் தொடங்கித் தலையுச்சி வரை செல்லும் காற்றை அடக்கி நாதத்தைச் சுரக் கோர்வைகளால் வகைப்படுத்தப்படலாகும். பண்ணுதல் என்பது வினையாலும் பண்ணெனப் பட்டது. பண் என்பது இராகம். பண் என்னும் பதத்திற்கு பாட்டு, சம்பூர்ண இராகம் என வேறு பொருளும் உண்டு. இதனையே வள்ளுவரும் தம் குறட்பாவில்

பண்ணென்னாம் பாடற்
கியைபின்றேற் கண்ணென்னாம்
கண்ணோட்ட மில்லாத கண்.
(கு.573)

பாடலின் பொருளுக்கு ஏற்ற முறையில் பண் அமைய வேண்டும். அவ்வாறு பொருத்தமாகவும் சிறப்பாகவும் அமையாத பண்ணினால் எவ்வித பயனும் இல்லை என்கிறார்.

மேலும் புகழ் என்னும் தலைப்பிலான அதிகாரத்தில் 'இசை' என்னும் சொல்லைப் 'புகழ்' என்னும் பொருளில் பயன்படுத்தியுள்ளார்.

ஈத லிசைபட வாழ்தல் அதுவல்ல
தூதிய மில்லை யுயிர்க்கு.
(கு.231)

'இசைபட வாழ்தல்' என்பதற்கு 'புகழ் உண்டாக வாழ்தல்' என்பது பொருளாகும். வள்ளுவர் புகழைக் குறிப்பதற்கு 'இசை' என்னும் சொல்லைப் பயன்படுத்தியிருப்பது போற்றுதற்குரியதாகும்.

திருக்குறள் ஒரு இயற்றமிழ் இலக்கியமாயினும் செவ்விசை (Classical Music) பற்றிய குறிப்புக்களைக் கொண்டு விளங்கும் இசை இலக்கியமாகவும் விளங்குவதைக் காண முடிகின்றது. திருவள்ளுவர் குறிப்பிடும் இசைபற்றிய செய்திகளின் வாயிலாக திருவள்ளுவர் ஓர் சிறந்த இசை அறிஞராக இருந்திருக்கிறார் என்பதும் தெரிய வருகின்றது.

**உசாத்துணை நூல்கள்**

1. தனபாண்டியன் து.ஆ - இசைத் தமிழ் வரலாறு (இரண்டாம் பகுதி)
2. பரிமேலழகர் உரை - திருக்குறள்
3. பெருமாள். ஏ.என். - தமிழர் இசை
4. அங்கயற் கண்ணி. இ தமிழிசை தொன்மையும் பெருமையும் தொகுதி - 1 மாதவி இரா. (ப.ஆ) - (கட். திருக்குறளில் இசைக்கருவிகளின் பங்கு)

✸✸



Scanned by CamScanner